# தேவன் தமது மக்களான இஸ்ரவேலருக்கு நல்ல பிரமாணங்களைக் கொடுத்தார்


**ஜெபம் :** "கர்த்தாவே, உமது மக்கள் நன்மையானவற்றைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாகும்படி நீர் உமது பழைமையான பிரமாணங்களைக் கொடுத்தீர் என்பதைக் குழந்தைகள் அறிய அவர்களுக்கு உதவி செய்யும்."


சிறுவர்களின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற செயல்பாட்டை தேர்வு செய்க.

**பத்து கட்டளைகளை மோசே பெற்றார் :**

ஒரு பெரிய பிள்ளை அல்லது ஆசிரியர், தேவன் எவ்வாறு மோசேயிடம் பத்து கட்டளைகளை இஸ்ரவேல் தேசத்திற்காகக் கொடுத்தார் என்பதை வாசிக்கவும் அல்லது கூறவும்.

- தமது நியாயப் பிரமாணங்களைப் பெற்றுக் கொள்ள தேவன் தமது மக்களை எவ்வாறு ஆயத்தப் படுத்தினார் என்பதைக் கூறுக, யாத்.19:9-13.
- சீனாய் மலையிலே தேவன் செய்தது என்ன, யாத்.19:16-25.
- ஒவ்வொரு கட்டளையையும் சுருக்கமாக விளக்கவும், யாத்.20:1-21.
- சிறுவர்கள் படத்தை வரையவும். பெரிய பிள்ளைகள் கட்டளைகளை எழுதவும்.




1. **இந்தக் கேள்விகளைக் கேட்கவும். பதில் அடங்கியுள்ள வசனங்கள் கேள்விகளுக்குப் பின்னால் தரப்பட்டுள்ளது.**

- தேவனை மக்கள் சந்திக்கப் போனபோது மலை எப்படி இருந்தது? யாத்.19:18
- மலையை மக்கள் தொட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? யாத்.19:24
- புகை மண்டலத்துக்குள் மலையைப் பார்த்த மக்கள் எவ்வாறு உணர்ந்தனர்? யாத்.20:18
- மோசேக்கு தேவன் கொடுத்த பத்து கட்டளைகள் யாவை? சிறுவர்கள், எத்தனை ஞாபகம் இருக்கிறதோ அத்தனை சொல்லவும்.

2. **கலா.5:18 ஐ விளக்குக : ì ஆவியினால் நடத்தப்படுவீர்களானால் நீங்கள் நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்வள் அல்லî**

- இயேசு மரித்து, மரித்தோரில் இருந்து எழுந்ததனாலும், நமக்குள் வசமாய் இருக்கும்படி பரிசுத்த ஆவியை அனுப்பியதாலும், நாம் இனிமேல் பழைய உடன்படிக்கையின் பூர்வீகப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல. ரோமர் 6:14 நமக்கு உறுதி அளிக்கிறது. "நீங்கள் நியாயப் பிரமாணத்துக்கல்ல, கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள்."
- இஸ்ரவேல் தேசத்ததுக்குக் கொடுக்கப்பட்ட பழைய பிரமாணத்தை இயேசு நிறைவேற்றி விட்டார், மத்.5:17.

- நாம் தேவ கிருபையால் இரட்சிக்கப்பட்டோம். பழைய பிரமாணத்தை வைத்துக் கொண்டதால் அல்ல. பரிசுத்த ஆவியானவரின் உருமாற்றம் செய்யும் கிரியையால். எபே.2:8-10.



- புதிய உடன்படிக்கையின் கீழ், நாம் இயேசுவுக்கு அன்பால் கீழ்ப்படிகிறோமே தவிர, அச்சத்தால் அல்ல. அவர் கூறினார், “என் மீது அன்பு செலுத்தினால், என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுங்கள்” (யோவான் 14:15).

இயேசு பல விஷயங்கள் குறித்து கட்டளை இட்டார். அவற்றை நாம் ஏழு கற்பனைகளாக கொடுக்கலாம். இவற்றிற்கு அப்.2:37-47 ல் விசுவாசிகள் கீழ்ப்படிந்தார்கள் என்று பார்க்கிறோம்.

1. மனந்திரும்பு, விசுவாசி, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படு.
2. ஞானஸ்நானம் எடு
3. அன்பு செலுத்து, மன்னிப்பாயாக
4. கர்த்தரின் பந்தியை ஆசரி
5. ஜெபி
6. கொடு
7. சீஷராக்கு



**3. மோசேயும் பத்து கட்டளைகளும் கதையை ந**

ஆராதனை வேளையின் போது இதை அரங்கேற் ... னை நேரத்தில் சமயம் ஒதுக்கி குழந்தைகள் இந்த ஐந்து பாத்திரங்களையும் ஒத்திகை பார்க்க உதவி செய்க : 1. கதை கூறுபவர்: கதை சுருக்கத்தை கூறுக. சிறுவர்கள் கூற வேண்டியதை ஞாபகப்படுத்துக 2. தேவ குரல் 3. மோசே 4. பவுல் 5. இஸ்ரவேலர் (இளம் குழந்தைகள்).

**கதை கூறுபவர் :** “பல்லாயிரக் கணக்கான, புதிய இஸ்ரவேல் ஜனங்கள், ஆளும் சட்டங்கள் இன்றி, வனாந்தரத்தில் சுற்றி அலைகின்றனர். தேவன் தமது புனித சட்டங்களை ஏற்க அவர்களை ஆயத்தப் படுத்துகிறார். தேவன் அவர்களுடைய தலைவனான மோசேயிடம் என்ன கூறினார் என்பதைக் கேளுங்கள்.”

**தேவ குரல் :** உரத்த சத்தமாய் யாத் 19:9-1 ஐ வாசிக்கவும்

**கதை கூறுபவர் :** இஸ்ரவேல் ஜனங்கள் என்ன கூறினார்கள் என்பதைக் கேளுங்கள்

**இஸ்ரவேலர் :** சத்தமிட்டு, “மலையின் மேல் உள்ள புகை மண்டலத்தைப் பாருங்கள்” “மின்னலைப் பாருங்கள்” “இடி என்னை பயமுறுத்துகிறது” “நாம் தேவனுக்கு அருகில் போகமுடியாது. போனால் சாவோம்.”

**கதை கூறுபவர் :** யாத்.19:16-20 ஐ வாசிக்கவும். பின்னர் கூறுகிறார், “தேவன் மோசேயிடம் கூறியதைக் கேளுங்கள்.”

**தேவ குரல் :** யாத்.19:21 ல் உள்ள தேவ வார்த்தைகளை சத்தமாக வாசிக்கவும்.

**கதை கூறுபவர் :** மக்களுக்கான நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொள்ள மலையின் மேல் ஏறிவருமாறு தேவன் மோசேயிடம் கூறியதை விளக்கவும். பின் கூறுவது “மலை உச்சியில் தேவன் மோசேயிடம் கூறியதைக் கேளுங்கள்.”

**மோசே :** (ஒரு நாற்காலி மீது ஏறி) “நீர் எங்களை ஆசீர்வதிக்கும்படி நாங்கள் இந்தப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவோம்.”

**கதை கூறுபவர் :** கலா.5:18 கூறுகிறது, “ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல.” தேவன் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திய பல ஆண்டுகளுக்குப் பின்னர் அப்போஸ்தலர் பவுல் கூறுவதைக் கேளுங்கள்.

**பவுல் :** இயேசு நம்மை இரட்சிப்பதற்காக மரித்தார். நாம் பிரமாணத்தின் கீழ் இல்லை. நாம் அன்பின் நிமித்தம் இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறோம்.

**இஸ்ரவேலர்கள் :** சத்தம் இட்டு, “அப்படியானால் இப்போது நாம் தேவ பிரமாணங்களை மீறலாம்.” “நாம் விரும்பும் எதையும் செய்யலாம்” “நாம் பாவம் செய்யலாம், அதனால் தேவன் நம்மேல் அதிக மன்னிப்பையும் அன்பையும் காட்டுவார்.”

**பவுல் :** இல்லை! இல்லை! தேவன் பரிசுத்தமானவர். நாம் அன்பினால் இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறோம். நாம் தேவனையும், ஒவ்வொருவரையும் நேசிக்குமாறு கூறுகிறார். அவரது பரிசுத்த ஆவி நமது உள்ளத்தில் அன்பை உற்பத்தி செய்கிறது. நாம் அன்பு கூர்ந்தால், கொலையோ களவோ செய்ய மாட்டோம்! விக்கிரகங்களை வணங்க மாட்டோம். தேவனுக்கு பிடித்தமானதையே செய்வோம்.

**இஸ்ரவேலர்கள் :** சத்தமிட்டு “புகையோடும் மின்னலோடும் தேவன் ஒரு மலையின் மேல் தோன்றுவாரோ? அவர் வெகு தொலைவில் இருக்கிறார்! அவர் மகா பரிசுத்தமானவர்! அவருக்கு அருகில் நாம் போக முடியாது. அவரோடு பேசுவதற்கு பயப்படுகிறேன்.”


**பவுல் :** இல்லை! இல்லை! புதிய உடன்படிக்கையின் கீழ், தேவன் இனிமேல் நமக்கு வெகு தூரமாய் இல்லை. அவர் நம்மில் வாசமாய் இருக்கிறார். ஒரு தகப்பனிடம் பேசுவது போல நாம் அவரோடு பேசலாம். இப்போது அவரோடு பேச நாம் பயப்பட வேண்டியது இல்லை.

**கதை கூறுபவர் :** நாடகம் முடிந்தவுடன் பிள்ளைகளுக்கு நன்றி கூறவும்.பெரியவர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள் இருக்கிறதா என்று கேட்கவும். (பகுதி 2ல் உள்ள கேள்விகளைக் கேட்க ஆயத்தப்படுத்துங்கள்).

**கலந்துரையாடல் :** சிறுவர்களைக் கேட்கவும், “பழைய பிரமாணத்திற்கும், இப்போது நாம் இயேசுவுக்குக் கீழ்ப்படிவதற்கும் உள்ள வேறுபாடு என்ன” (அவர்கள் உதாரணங்களைத் தரட்டும்).

**படம் :** புகை ஏழும்பும் ஒரு மலையை வரைக. சிறுவர்கள் அதைப்பார்த்து வரைவார்களாக. ஆராதனை வேளையில் அவர்கள் அதை பெரியவர்களுக்குக் காட்டி அது தேவனுடைய பரிசுத்தத்தை உணர்த்துகிறது என விளக்கவும்.

**மனப்பாடம் :** மத்.7:12



**கவிதை :** சங்.19:7,10,11 ஐ மூன்று குழந்தைகள் ஒவ்வொன்றாகப் பாடட்டும்.

**ஜெபம் :** கர்த்தாவே! நீர் பரிசுத்தமானவர்! நீர் எங்கள் பாவத்தை வெறுக்கிறீர். நாங்கள் மனந்திரும்பி இயேசுவில் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக எங்கள் பாவங்களை எங்களுக்கு உணர்த்தியதற்கு நன்றி. பிரமாணம் எங்களை கட்டாயப்படுத்துவதினால் அல்ல, அன்பினாலேயே நாங்கள் உமக்குக் கீழ்ப்படிய விரும்புகிறோம்.

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net